# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8040824
Cr.No.03/2023/VAC/KLK

1. District மாவட்டம் : கள்ளக்குறிச்சி PS காவல்நிலையம் : ல.ஒ.க.பிரிவு Year ஆண்டு : 2023 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 12.07.2023

2. (i) Act சட்டம்: PC ACT 1988 as Amended Sections பிரிவுகள்: 7 of PC ACT (Amendment)
(ii) Act சட்டம்: in PC (Amendment) ACT 2018 Sections பிரிவுகள்: ACT 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 07.07.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.07.2023 Time : நேரம் 07.15 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார், 3.5. கி.மீ தென்மேற்கு,
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.மணி, வயது-33 (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்பிரமணி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 4/244, மேட்டு காலனி, S.ஒகையூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பாஷா
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
கள்ளக்குறிச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Ma

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 12 07 2013

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் க. சத்தியராஜ்
Rank: நிலை காவல் நிலைய [illegible] No. எண் ........
2ம். நி. கா. [illegible]
[illegible]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.07.2023, 09.40 hrs

Submitted; On 12.07.2023 at about 07.15 hrs, while I was in my office, one Tr.S.Mani, Age 33/2023 approached my detachment office and lodged a computer typed complaint which read as follows:- அனுப்புநர் S. மணி, வயது 33/2023 த/பெ சுப்பிரமணி, 4/244, மேட்டுகாலனி, S. ஒகையூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஹரிஷ் மற்றும் ரித்தீஷ் என இரண்டு மகன்கள் உள்ளனர். நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து, சோழமண்டலம் நிதி நிறுவனத்தில் மாதந்திர தவணை வசூலிக்கும் பணி செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு தம்பி ஒரு தங்கை மற்றும் ஒரு அக்கா என மொத்தம் மூன்று பேர் ஆவார்கள். எனது தந்தை சுப்பிரமணி கடந்த 2007 ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டம் ஒகையூர் கிராமத்தைச் சேர்ந்த குண்டேரி மகன் பெரியசாமி என்பவரிடமிருந்து சர்வே எண்.229/3 மற்றும் 229/4A-ல் உள்ள 90 செண்டு நிலத்தை நாகலூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவண எண்.1327/2007-யின் படி கிரையம் பெற்றார். அன்றைய தேதியிலிருந்து தற்போது வரை அந்நிலமானது எங்களது பாத்தியத்தில் உள்ளது. இந்நிலையில் எங்களுக்கு நிலம் கிரையம் கொடுத்த பெரியசாமியின் தம்பி முத்துசாமியின் பேரனான திரு.கோவிந்தராஜ் என்பவரின் பெயர் எங்களது பட்டாவில் சேர்க்கப்பட்டிருந்தது எங்களுக்கு தெரியவந்ததால், நாங்கள் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலரை அனுகி எங்களிடமிருந்த ஆவணங்களை காண்பித்து திரு.கோவிந்தராஜ் என்பவரின் பெயரை எங்கள் பட்டாவில் இருந்து நீக்கம் செய்தோம். இதனை தொடர்ந்து திரு.கோவிந்தராஜ் மேற்படி நிலத்தின் பட்டா தவறாக மாறியுள்ளதாக கூறி ரத்து செய்ய கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேல் முறையீடு செய்தார். இது சம்மந்தமாக நாங்கள் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்க்கு விசாரணைக்கு சென்றோம். விசாரணையில் எவ்வித முடிவும் எட்டபடாத நிலையில், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.பாலு இது தொடர்பாக கோப்புகளை தான் பார்த்து வருவதாக தெரிவித்து, அம்மனுவை எங்களுக்கு சாதகமாக உயர் அதிகாரிக்கு பரிந்துரை செய்து முடித்துதருவதாகவும், அதற்க்கு ரூ.15,000/- பணம் கொடுக்க வேண்டுமென்றார். நான் அதற்கு இது என்ன அரசுக்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டேன், அதற்கு அவர் இல்லை இது உங்களுக்கு சாதகமாக பரிந்துரை செய்து மனுவினை முடிப்பதற்க்கு இலஞ்சமாக கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். பிறகு நான் அங்கிருந்து வீட்டிற்க்கு வந்துவிட்டேன். மறுநாள் 07.07.2023-ந்தேதி மதியம் அவரை மீண்டும் சந்தித்து என் குடும்ப கஷ்டத்தை கூறி ஏதேனும் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்க்கு அவர் ரூ.15,000/- இவ்வேலைக்கு குறைவான தொகைதான் என்றும், வேண்டுமானால் உன் முகத்திற்க்காக ரூ.10,000/- பெற்று கொள்கிறேன், என்று கண்டிபாக கூறிவிட்டார். நான் அவரிடம் சரிங்க சார் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன், என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது அவருக்கு இலஞ்சம் கொடுத்து, எனது மனுவை முடிக்க எனக்கு விருப்பம் இல்லாததால் அவர் மீது லஞ்ச ஒழிப்பு துறையிடம் புகார் கொடுக்கலாம் என முடிவு செய்து என் தந்தையிடம் இதை பற்றி தெரிவித்த போது அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்தார். பிறகு எனக்கு தெரிந்த நபர் மூலம் புகார் மனுவினை தயார் செய்து, இன்று தங்களிடம் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். எனவே வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும் மனு மீதான விசாரணையை முடிக்க ரூ.10,000/- இலஞ்சம் கேட்கும் திரு.பாலு மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (சு.மணி) நாள்: 12.07.2023 இடம்:கள்ளக்குறிச்சி.

Madam,

Received the above computer typed complaint on 12.07.2023 at about 07.15 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Kallakurichi Vigilance and Anti-Corruption in Cr.No.03/2023/KLK u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended in the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs today on 12.07.2023 sd xxxxxx on 12.07.2023 (K.Sathiyaraj) Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Kallakurichi.

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.